

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் தலைவர் ஐ.லியோனியுடன் இணைந்து திருச்சியில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழக சேமிப்பு கிடங்கு மையத்தினை ஆய்வு செய்தார்.

# பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிவிப்பு!



பெரம்பலூர், மே 29-

பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 31.05.2023,(புதன்கிழமை), காலை 10 மணிக்கு பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், பெரம்பலூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளருமான அன்னியூர் சிவா, குன்னம் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும்,மாநில இளைஞர் அணி துணைச் செயலாளருமான ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா கொண்டாடுவது, “உடன்பிறப்புகளாய் இணைவோம்” புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், வார்டு கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருத்துறைப்பூண்டி நகரப்பகுதியில்

# தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி!

## நகர் மன்றத் தலைவர் கவிதா பாண்டியன் வழங்கினார்!

திருவாரூர், மே29-

திருத்துறைப்பூண்டி நகர்ப்புற பகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்கு நகர்மன்ற தலைவர் கவிதாபாண்டியன் தேவையான உதவிகளை உடனடியாகமேற்கொண்டார்.


திருத்துறைப்பூண்டி நகரப்புறத்தில் அமைந்துள்ளது பெரியநாயகிபுரம் பகுதி. இந்த பகுதியில் நள்ளிரவில் ஏற்பட்ட தீவிபத்தால் ஞானசேகரன் என்பவரது வீடு முற்றிலும் எரிந்து சாம்பலானது. தீவிபத்தை மேலும் பரவாமல் திருத்துறைப்பூண்டி தீயணைப்பு வீரர்கள் தடுத்தனர் . விபத்து குறித்து அறிந்த நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பாதிக்கப்பட்டோருக்கு தேவையான முதற்கட்ட உதவிகளை மேற்கொண்டார்.

மேலும் அவர்களுக்கு அரசின் உதவிகளை வட்டாட்சியர் காரல் மார்க்ஸ் அவர்களின் வழியாக பெற்றுத்தரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினார். நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், கவுன்சிலர் ரமேஷ், துணை வட்டாட்சியர் ஜோதிபாசு, கிராம நிர்வாக அலுவலர் முருகானந்தம், மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. மன்னப்பன்

### மே 29 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### முதல்வர் சுற்றுப் பயணத்தால்

# தமிழகத்துக்கு பல்வேறு தொழில் திட்டங்கள் வந்து சேரும்!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உறுதி!



திருச்சி, மே 29-

தமிழக முதல்வர் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளதால் தமிழகத்துக்கு பல்வேறு தொழில் திட்டங்கள் வந்து சேரும் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை அவர் கூறியது:

முதல்வராக இருந்த பலரும் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளனர். மறைந்த முதல்வர் ஜெயலலிதா ரூ.24 ஆயிரம் கோடிக்கு திட்டங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருவேன் என்றார். ஆனால், வந்து சேரவில்லை. எடப்பாடி கே. பழனிசாமி, முதல்வராக இருந்தபோது அமைச்சர்களுடன் பல்வேறு நாடுகளுக்கு சென்று வந்தார். தமிழகத்துக்கு எந்தத் திட்டங்களும் வந்து சேரவில்லை.

ஆனால், நமது முதல்வர் அவர்கள் சுற்றுப் பயணத்துக்கு மட்டும் பல்வேறு விமர்சனங்கள் வருகின்றன. எதிர்க்கட்சிகள் என்றாலே ஏதாவது சொல்லிக் கொண்டுதான் இருப்பது வழக்கம். தமிழகத்துக்கு நல்ல பல திட்டங்களை கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்ற உறுதியுடன் அமைச்சர் மற்றும் அதிகாரிகளை அழைத்துக் கொண்டு சென்றுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூரில் 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதபோல, ஜப்பான் பயணத்திலும் ஒப்பந்தங்கள் ஏற்படும். அதன் மூலமாக தமிழகத்துக்கு பல்வேறு புதிய தொழில் திட்டங்கள் வந்து சேரும். ஏற்கெனவே, 2 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித்தருவோம் என்ற உறுதியின் படி உலகம் முழுவதும் தொழில் முதலீடுகளை ஈர்த்து இளைஞர்களுக்கு வேலை வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய சுற்று பயணமும் நன்மையாகவே அமையும்.

வெளிநாடு சென்றாலும், செல்லாவிட்டாலும் குறை கூறும் நபர்கள் குறைகளை கூறிக் கொண்டுதான் இருக்கின்றனர். அதனை பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

புதிய நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்பதில்லை என தி.மு.க. முடிவு செய்தது. முதல்வர் அவர்கள் அறிவிப்பால், பல்வேறு மாநில முதல்வர்களும், கட்சியின் தலைவர்களும் நிகழ்ச்சியை புறக்கணிப்பதாக தெரிவித்துள்ளனர். நிச்சயமாக நாங்கள் அந்த விழாவில் கலந்து கொள்ள மாட்டோம்.

ஏற்கெனவே மகளிருக்கு இலவச பேருந்து பயணம் என்பது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இப்போது, 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும் இலவச பேருந்து பயணம் என்பது கூடுதல் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது என்றார் அவர்.

### தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து

# ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு பணப் பலன்களுக்குரிய காசோலைகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலை!

சென்னை, மே 29 -

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து, ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்களின் வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்பு தொகை உள்ளிட்ட பணப் பலன்களுக்குரிய காசோலைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த மே 2020 முதல் நவம்பர்2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 6,281 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.1,582.44 கோடி வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதனை தொடர்ந்து, முதற்கட்டமாக கடந்த 01-12-2022 அன்று போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த மே2020 முதல் மார்ச்2021 வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 1,241 நபர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.242.67 கோடியும், இரண்டாம் கட்டமாக கடந்த 27-03-2023 அன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த ஏப்ரல் 2021 முதல் மார்ச்2022 வரை பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 1,626 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.308.45 கோடி வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கடந்த ஏப்ரல்2022 முதல் நவம்பர்2022 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்ற / விருப்ப ஓய்வு பெற்ற / இறந்த பணியாளர்கள் என மொத்தம் 3,414 நபர்களுக்கு வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு தொகை மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை உள்ளிட்ட பணப் பலன்கள் ரூ.1,031.32 கோடி வழங்கப்படவுள்ளது.

மூன்றாவது கட்டமாக சென்னையில் நேற்று முன்தினம் (27.05.2023) கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 441 நபர்களுக்கு ரூபாய் 115.47 கோடி மற்றும் அரசுப் விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 171 நபர்களுக்கு ரூபாய் 55.76 கோடி, ஆக மொத்தம் 612 நபர்களுக்கு ரூபாய் 171.23 கோடிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம், மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் அ.அன்பு ஆபிரகாம், அரசுப் விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் கு. இளங்கோவன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### பூவிருந்தவல்லியில் தெருமுனைக் கூட்டம்!

திருவள்ளூர், மே 29-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர். செந்தாமரை ஏற்பாட்டில் நடுகுத்தகை ஊராட்சியில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர், தலைமைக்கழக பேச்சாளர் தாயகம் கவி எம்எல்ஏ ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடுக்குத்தகை கே.ஜெ. ரமேஷ், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

### பால் உற்பத்தியாளர்கள் சேவையை மேலும் அதிகரித்தல் - அரசின் நலத்திட்டங்களை பால் உற்பத்தியாளர்களுக்கு கொண்டு சேர்த்தல்!

# பால்வளத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது! தலைமைச் செயலர் வெ.இறையன்பு முன்னிலை!

சென்னை, மே 29-

பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் தலைமையில் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு முன்னிலையில் பால் உற்பத்தியாளர்கள் சேவையை மேலும் அதிகரிக்கவும் அரசின் நலத்திட்டங்களை பால் உற்பத்தியாளர்களுக்குக் கொண்டு சேர்க்கவும் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதன் விவரம் வருமாறு:-

நேற்று முன்தினம் (27.05.2023), தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் மற்றும் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஆகியோர் துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கூட்டத்தில், முதலமைச்சரின் செயலாளர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் ந.சுப்பையன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை அமைச்சர் கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள காலி நிலங்கள், சங்க அளவில் உள்ள காலி நிலங்கள் மற்றும் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் பசுந்தீவன உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகள் அனைத்திற்கும் காப்பீடு வழங்க வேண்டும் என்றும், அக்கறவை மாடுகளுக்கு தேவையான சரி விகிதக் கலப்பு தீவனத்தை தடையின்றி வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

புதிய பால் உப பொருட்கள் ஆவினில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் அப்பால் பொருட்கள் ஆரோக்கியமானதாகவும் நிலையான தரத்திலும் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

சங்க அளவில் செயல்படும் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையங்களில் கறவை மாடுகளிடமிருந்து பெறப்பட்ட பால் உடனே வந்தடைய வேண்டும் என அறிவுறுத்தினார். தற்போது ஆவின் நிறுவனத்தில் நடைபெற்று வரும் உட்கட்டமைப்பு வசதிகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி ஆவினின் பால் கையாளும் திறனை தினசரி 70 லட்சமாக உயர்த்திட உத்தரவிட்டார்.

தலைமைச் செயலாளர், பால் உற்பத்தி செலவை குறைக்க அகத்தி, சூபாபுல் ஆகிய தீவன மரங்கள் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர்களின் நிலங்களில் வளர்க்க வேண்டும் எனவும், ஆவின் நிறுவனம் தனித்துவமான பால் உப பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும் ஆவின் ஊழியர்களுக்கு தேசிய பால்வள நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக வல்லுநர்களைக் கொண்டு புத்தாக்க பயிற்சிகள் வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

இறுதியில் பால்வளத் துறை அமைச்சர் பால் பண்ணைகளில் ஆட்டோமேஷன் தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தி செயல்திறனை அதிகரிக்கவும், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தினார்.




சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (27.05.2023) இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு ஓய்வுகால பணப்பலன்களுக்குரிய காசோலைகளை வழங்கினார். அதனை தொடர்ந்து, இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுடன் பயனாளிகள் குழுபுகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்தரரெட்டி மற்றும் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் அ.அன்பு ஆபிரகாம், கு.இளங்கோவன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.